**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள தேசிய நூலக தகவல் விஞ்ஞான நிறுவனம்- 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள தேசிய நூலக தகவல் விஞ்ஞான நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொனறின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக முறையே கிரயம் ரூபா 8,284,259 மற்றும் ரூபா 12,509,438 ஆன நூலகப் புத்தகங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு | சரிசெய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் சரியாக | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்படும். | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் சகல முதலீடுகளுக்கும் உரிய காசுப்பாய்ச்சல் முதலீட்டு செயற்பாடுகளாக இனங்காண வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களில் முதலீட்டு செய்யப்பட்ட பணம் தேறிய பின்னர் காசாக ஈடுசெய்யப்பட்டு தேறிய பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப் பட்டதுடன் அப்பெறுமதியை காண்பிக்கும் போது ரூபா 273,847 குறைத்து குறிப்பிடப்பட்டிருந்தது. | புதிய நிலையான வைப்பு முதலீடு மற்றும் நிலையான வைப்பு தேறியமையால் தொழில்படு மூலதன மாற்றங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள துடன் அது அடுத்து வரும் ஆண்டின் போது முதலீட்டு செயற்பாடு களின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புக்களின் முதலீடு மற்றும் தேறிவைகள் தனித்தனியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் நிலையான வைப்பு முதலீட்டில் இருந்தும் மீளாய்வாண்டின் போது கிடைத்த வட்டி வருமானம் ரூபா 5,173,235 ஆக காண் பிக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 3,087,166 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள இந்த வட்டி வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கங்களின் கீழ் குறைக்கப்பட்டு காண்பித்து முதலீட்டு செயற்பாடுகளில் வட்டி வருமானமாக சேர்க்கப் பட்டுள்ளது. | வட்டி வருமானம் சரியாக கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு உரிய கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,938,045 ஆக இருந்த போதிலும் கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் அது ரூபா 1,551,805 ஆனமையால் பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 386,241 அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்க ளுக்குரிய கணிப்பீடு செய்யப்பட்ட பெற வேண்டிய முதலீட்டு வருமானம் ரூபா 1,138,045 ஆக இருந்த துடன் அந்த வருமானம் நடைமுறைச் சொத்துக் களின் கீழ் காண்பிக்கப் பட்டுள்ளது. | மேற்படி |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு நடவடிக்கைகளில் ரூபா 12,493,893 பற்றாக்குறை காணப்பட்ட போதும் மற்றும் நிரண்ட நிதியத்தில் வரவுப் பெறுமதியொன்று காணப்பட்ட போதும் நிறுவனம் சார் அபிவிருத்தி நிதியத் | அபிவிருத்தி நிதியத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மாற்றல்கள் உரிய பாடநெறி கணக்குகளின் செலவினமாக தற்போது இனங்காணப்பட்டு | பற்றாக்குறை காணப்பட்ட போது நிதியத் திற்காக செலவு வைக்காதிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திற்கு ரூபா 4,510,602 மாற்றப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அந்தப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ஆண்டின் தேறிய இலாபத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களாக காண்பித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| வருடம் அல்லது ஆண்டு | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| முதலீட்டுப் பெறுமதி | 28,505,907 | 28,779,754 | 273,847 | பெற வேண்டிய வட்டி வருமானத்தை சீராக்கும் போது இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | முதலீட்டு பெறுமதி சரியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மாணவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பாடநெறி வருமானத்தில் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 3,345,530 கடன் மீதி காணப்பட்டதுடன் அது மொத்த கடன் மீதியில் 63 சதவீதமாக இருந்த போதிலும் அந்தக் கடனை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கைகள் முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதியில் அதிக அளவு பாட நெறியை விட்டுச் சென்ற மாணவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பணமாக இருந்ததுடன் அந்தப் பணத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்காத வருமானங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் | உரிய அமைச்சரினதும், நிதி விடயப்பொறுப்பு அமைச்சரினதும் முன் அங்கீகாரம் பெற்றுக் | பாடநெறி வருமானத்தில் நிலையான வைப்பை மேற் | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 9(2)(ஊ), 10(5)(1) மற்றும் 11(அ) பிரிவுகள் | கொள்ளாமல் நிறுவனம் உழைத்த வருமானங்களில் ரூபா 28,779,754 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | கொண்டுள்ளதுடன் அதன் ஏனைய வருமான செலவினங்கள் மற்றும் மூலதன செலவினங்களை தீர்ப்பதற்காகவும், இந்த பணிகள் பொது முயற்சி சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | 2015 நவம்பர் 17 ஆந் திகதிய இலக்கம் 15/2015 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | பரீட்சை நடாத்தப்பட்ட திகதியில் இருந்து 03 மாத காலத்திற்குள் பெறு பேறுகள் விநியோகிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 முதல் 2024 ஆம் ஆண்டு வரை நடாத்தப்பட்ட 37 பரீட்களின் பெறுபேறுகள் விநியோகித்தல் 03 மாதங்களை விஞ்சி 02 மாதங்கள் முதல் 17 மாதங்கள் வரையிலான தாமதம் ஏற்பட்டிருந்தது. | பரீட்சை விடை மதிப்பீட்டாளர்கள் கொழும்பில் இருந்து வெளியே சென்றமையினால் காலம் எடுத்திருந்தமை, கல்விசாரா பதவியணியினரின் வேலை நிறுத்தம், மாணவர்களின் ஒப்படைகள் மற்றும் செயற்திட்ட அறிக்கைகள் கையளித்தல் தாமதம் ஏற்பட்டிருந்தமை போன்ற விடயங்கள் தாக்கமளித்திருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் IX அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆந் திகதிய இலக்கம் 10/2017 என்ற பல்கலைக்கழக | கல்விசார் பதவியணியினரில் உத்தியோகத்தர்கள் நான்கு பேரின் வருகை மற்றும் வெளிச்செல்கை உறுதிப்படுத்தப்படாமல் மீளாய்வாண்டிற்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 20,842,876 செலுத்தப்பட்டிருந்தது. | வருகை மற்றும் வெளிச் செல்கை தொடர்பான பொது திட்டமொன்று தொடர்பாக முன்மொழிவொன்று சமர்ப்பிக்குமாறு உப வேந்தரின் குழுவிற்கு (CVCD) அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் அவ்வாறான திட்ட முறைமையொன்று தொடர்பாக எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை | தாபனவிதிக் கோவை மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை. | | எடுப்பதுடன் எனினும் வருகை பதிவேடு பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2022 சனவரி 03 ஆந் திகதி இலக்கம் 01/2022 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | நூலகப் புத்தகங்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அறிக்கை விரைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டிற்குரிய மெய்மை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஆரம்ப ஆய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை மேற் பார்வைக் குழுவிற்கு சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதுடன் 2025 யூன் மாதத்தில் இருப்பு மெய்மையாய்வு செயற்பாடுகள் பூர்த்தி செய்ய முடியும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,493,893 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,638,250 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,855,643 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானம் ரூபா 3,280,655 இனால் குறைவடைந்தமை, செயற்பாட்டுச் செலவினம் ரூபா 5,511,961 இனால் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு முதல் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிட மிருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத் தமான ரூபா 163,533 ஆன கடன் மீதி யொன்று மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | உரிய ஆவணங்கள் பூரணமாக்கப்படாதிருந் தமையால் உரிய பணத்தை நிறுவனத்தில் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகள் காணப் படுவதுடன் இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து மீண்டும் முறைப்பாடு செய்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | கடனை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2009 ஆகஸ்ட் 27 ஆம் திகதி வழங்கப் பட்டிருந்த அமைச்சரவை | நிறுவனத்தின் மூலம் நடாத்தக்கூடிய பாட நெறி | அமைச்சரவைத் தீர்மானத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரத் தின் அடிப்படையில் ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு ஆசிரியர் நூலகர் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் ஆசிரியர் நூலகர் கலைமானி பாடநெறியை உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் கல்வி அமைச்சு அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்காமையின் காரணமாக 2014 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இருந்து மேற்கூறப்பட்ட பாடநெறி கைவிட்டி ருந்த போதும் கல்வி அமைச்சு மற்றும் தொடர்பினை எற்படுத்தி ஆசிரியர் பிரமாணக்குறிப்பில் மேற்கூறப்பட்ட பாட நெறியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | மாணவர் நூலக விடய மாத்திரம் வரை யறுக்கப்படாதிருந்ததுடன் விதப்பரைகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தற்போது நூலகம் மற்றும் விஞ்ஞாபன விஞ்ஞானம் தொடர்பாக உயர் சான்றிதழ் பத்திர பாடநெறியில் இருந்து கலாநிதி பட்டம் வரையான பாடநெறிகள் 10 அளவில் NILIS நிறுவனத்தால் நடாத்திச் செல்லப்படுகின்றது. ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் இந்த மாற்றங்களை மேற்கொள்வதற்கு 2009 ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானம் இதுவரை அமுல்படுத்தப்பட வில்லை. 2012 ஆகஸ்ட் 16 ஆம் திகதி மற்றும் 2014 செப்டெம்பர் 12 ஆம் திகதிகளில் நடைபெற்ற பொது முயற்சிகள் குழு (COPE) கூட்டங்களின் போது இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு உரிய பிரச்சினைகளை விரைவாக தீர்க்குமாறு கல்வி அமைச்சிற்கு அவ்வப்போது அறிவிக் கப்பட்டிருந்த போதும் நியாயமான நடவடிக்கை எடுக்கப்படா திருந்தமை, இது தொடர்பாக கல்வி அமைச்சு மற்றும் ஏனைய உரிய தரப்பினர் மீண்டும் மீண்டும் அறிவித்தல் மற்றும் கலந்துரையாடல்களின் மூலம் அதற்காக முன் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை எமது நிறுவனம் தவறவிட்டிருந்தது. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பௌதீக / வெளிச் சுற்றாடலை அபிவிருத்தி செய்வதற்காக மலசல கூடத்தை | இந்த நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மிகவும் விரைவாக நிறைவேற்றுவதற்கு | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| பழுதுபார்த்தல் மற்றும் கூரையினை பழுதுபார்த்தல், ஏனைய வேறொரு மின்சார மீற்றரை பொருத்துதல் போன்ற செயற்பாடுகளில் ஆண்டில் 25 சதவீத செயலாற்றல் அடைந்து கொள்வதற்கும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச தரத்தினை உறுதிப்படுத்துதல் போன்ற இலக்கை அடைந்து கொள்வதற்வதற்கு தேசிய தொழில் அமைப்புக்களுடன் இணைய தளத்தை அபிவிருத்தி செய்தல், வெளி அபிவிருத்திகளுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் இணையதளம் மற்றும் சமூக ஊடகம் ஊடாக நிறுவனத்தின் இருப்பை வலுப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை மேற் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்பட்ட போதும் அதற்குரிய செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. மேலும் தேசிய நூலகம் மற்றும் விஞ்ஞாபன விஞ்ஞானத்தின் சட்ட திருத்த நடவடிக்கைகள் 50 சதவீதம் பூர்த்தி செய்து கொள்வதற்கு திட்டமிடப்பட் டிருந்த போதிலும் அதற்கான குழுவொன்று நியமித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |